உ

கடவுள் துணை.

கள்ளுக்கடைசிந்து என்னும்

# குடியர்சிந்து.

—:*:—

இஃது சிதம்பரம்,

நடராஜசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை-இட்டா,

பார்த்தசாரதிநாயுடு அவர்களால்

சக்கரவர்த்தி அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1915.

உ

கடவுள் துணை.

# கள்ளுகடைசிந்து என்னும்
# குடியர்சிந்து.

விருத்தம்.

நம்பினேன் யிருந்தகள்ளே நாடியை யறிந்தகள்ளே, தம்பியுந்தகப்பன்பாட்டன் தலம்பறை கண்டகள்ளே, வம்புரீசெய்தாய்கள்ளே வருவையோசொல்வாய்கள்ளே, சொம்புபோல் குடுவைகள்ளே சோறுபோல் கொதிக்குங்கள்ளே, தங்கம்போ லானகள்ளே தைரியங்கொடுக்குங்கள்ளே, எங்களேவளர்க்கும் கள்ளே எங்கேயோ யொளித்தாய்கள்ளே, சிங்கம்போலெகுருங்கள்ளேஜெயிலுக்கு அனுப்புங்கள்ளே, பொங்கியே வழியுங்கள்ளே புறப்பட்டு வருவாய்கள்ளே.

ஆனந்தக்களிப்பு.

ஜாடியேஉனக்கொருகும்பிடு—அந்த
சாராயங்குடித்தாக்கால் பேதியெடுக்குது
புட்டியேஉனக்கொருகும்பிடு—அந்த
பீரைகுடித்தாக்கால் சோரைகெடுக்குது

கள்ளேஉனக்கொருகும்பிடு—அந்த
கஞ்சாவடித்தாக்கா நெஞ்சைவுலத்துது
மரமேஉனக்கொருகும்பிடு-அந்த
மதத்தையிழுத்தால் பலத்தைக்கெடுக்குது
எப்போவருவாயோகள்ளே-உனக்கு
இதுஞாயமல்லாநீ எழுந்துவாகள்ளே.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

வந்துதேகள்ளு-யீஸ்வரன்போலே
வந்துதேகள்ளு.

அநுபல்லவி.

வந்துதேபார்கள்ளு வாகனங்கரிவாடு
நொந்துயிருந்தபேரை நெட்டித்தள்ளிக்கொண்டு-வந்

சரணங்கள்.

ஆதிவேலைகளெல்லாம் அடுமாண்டுபோச்சுது
அஞ்சணு ஆரணு படியொன்றுஆச்சுது
சோதியதன்சுருக்கு சூரியனுக்குமேது
சுள்ளைக்கடித்துக்கொண்டு உள்ளுக்குக்கள்விட்டால்
யெழும்புதேபோதை-தலைக்குமேல்கைதூக்கி
கடிக்குதேபல்லை.

ஆரணுபோனாலும் ஆட்டின்மயிர்போச்சி
அதுகுடிக்கும்போதை காட்டுப்புலியும்சிச்சீ

பாரில்பட்டையும்பத்தாய் குழந்தைகுடிக்கும்பாச்சி
பாட்டாக்கள்ஒருமூச்சி பாணந்தடுத்துப்போச்சி(வந்)

ரகுபதிகடைகள்ளு-ராவெல்லாங்குடையுது
ரவுண்டுடாணுகள்ளு கிருக்குகள்வாங்குது
பரைச்சேரிகடைகள்ளு பாடுதுஆடுது
பாழுஞ்சுடுகாட்டுகள்ளு தலைகீழாய்துள்ளுது
இதுவென்னகள்ளு-பலவைதொட்டிகள்ளு
ஒழுவுதேசொள்ளு

பெண்சாதியெதிர்த்தாக்கால் பளிச்சென்றுமாட்டுது
பிள்ளைநயினுவென்றால் சொல்லையிலடிக்குது
தன்பேச்சிபோல்வந்தால் தட்டிக்கொடுக்குது
தடுத்துசொன்னால்பல்லை கடித்துமுடுக்குது
யெடுக்குதேகிருக்கு நாலுபேர்பிடித்தாலும்
யிழுக்குதேமொரப்பு. (வந்து)

---

செஞ்சி ஏகாம்பரமுதலியாராலியற்றிய
குடியர் அலங்காரம்.

வெண்பா.

காலைக்குடியரெல்லாங் கவைக்குதவார்கள்குடிப்பார்
வேலைக்குப்போகார் வெறியனைப்போலலைவார்
வெறுமைவந்தபோது வேலைக்குபோவார்
தருமமோகுடியர்க்குத் தான்.

## புருஷன்சொல் சிந்து.

முக்கி முக்கிகஷ்டப்பட்டு கேளடி பெண்ணே
மூணுபணங்கொண்டுவந்தேன் பாரடி கண்ணே
பக்குவமாய்செலவுநீ பண்ணடி பெண்ணே
பாட்டாக்கள்ளுக்கொருபணந் தாக்கடி கண்ணே

## பெண்சொல்லல்.

கள்ளைமறந்திடடா குடிகார பாவி
காலையில்குடியாதடா சதிகார பாவி
பிள்ளைகுட்டிபெத்தாயோடா சண்டாள பாவி
யின்னம்புத்திவல்லையோடா குடிகார பாவி

(புரு)சேனைநாள்பழக்கமடி முட்டாளு பெண்ணே
ஜென்மத்திலேவூரிபொச்சு கெட்டண்டி கண்ணே
நானுமட்டுங்குடித்தேனென்று எண்ணுதே பெண்ணே
நாலுமூணுதலம்பரையாய் நடக்குது கண்ணே

(பெ)குடிக்கேனென்றுசத்தியங்கள்பண்ணையே பாவி
குடல்பழுத்துதென்றுகதை சொன்னையே பாவி
ஜாடிகள்ளுஉன்குலைக்கிப்போதாதே பாவி
சாப்பிட்டாலும்வீண்சண்டைகள்செய்யாதே பாவி

(புரு)மனவருத்தப்படுவதாலே கேளடி பெண்ணே
மாஜினமாகிலுந்தின்னு வாரண்டி கண்ணே
துணதுணென்றுபேசாதடி முட்டாளு பெண்ணே
துட்டுகூடகுறைஞ்சிபோச்சி தூக்குது கண்ணே

(பெ)பணம்போனாலும் போகுதையாஎந்தன் கணவா
பங்கிவுண்டைபழக்கம்வேண்டாம் எந்தன் கணவா
குணத்தின்படி நடப்பேனையா எந்தன் கணவா
கும்மாமுட்டுங்குடுக்கவேண்டாம் எந்தன் கணவா

(புரு)கும்மாவுன்னைகுடுப்பதில்லேகேளடி பெண்ணே
குடிக்கிமட்டும்ஒத்தைபணம் தாக்கடி கண்ணே
சும்மாசும்மாசொன்னேனென்று எண்ணாதே பெண்
சோத்துப்பானையெகிரிப்பூடுந் தவறினால் கண்ணே

(பெ)சோத்துபானைஎகரிப்போனால் கேளடாபாவிஉன்
கூத்துதாண்டாகாஞ்சிபோகுங் குடிகார பாவி
நேத்துசொன்னசத்தியத்தை மறந்தாயோ பாவி
நெஞ்சிமட்டும் நெட்டிவிட்டு வந்தாயே பாவி

(புரு)குடியருக்குசத்தியங்க ளேதடி பெண்ணே
கூச்சலிங்கேபோடவேண்டாம் கேளடி கண்ணே
படியடித்தும்போதைகொஞ்சங்காணண்டி பெண்ணே
பணமிருந்தால்பட்டைகுடித்துவருவண்டி கண்ணே

(பெ)பட்டைமூஞ்சிலிடிவிழுக குடிகார பாவி
பாட்டாவுடன்பட்டைசேர்ந்தால்மோசண்டா பாவி
கஷ்டப்பட்டுபணத்தைவீணு யழிக்காதே பாவி
காலங்கருப்பானதினால் சொன்னேண்டா பாவி

(புரு)பணம்போனாலும்ஷட்டம்போச்சிகேளடி பெண்
பட்டாயடித்தால்கையுங்காலு முரைக்குதுபெண்ணே

கணக்குப்பார்த்துகுடிக்காவிட்டால்கேளடிபெண்ணே
காலணாகூடகையில் கிட்டாது பெண்ணே

(பெ)பஞ்சைப்போலேகற்றகல்வி படிக்காதே பாவி
பாரிலுள்ளோரெல்லாம்வுன்போல்குடித்தாரோ பாவி
செஞ்சி-ஏகாம்பரங்கவியை கேளடா பாவி
சிரிக்குதுஉலகமெல்லாங் குடிகார பாவி

தெலுங்குந்-தமிழும்.

ஒகநெலகா படினபாடு
ஊரந்தஅடிகிஞ்டி ஜாடியே கள்ளுஜாடியே

பிருபுட்டிசெய்தமோசம்
பிப்பாதண்ணையகேட்டபோருஜாடியே கள்ளுஜாடியே

போசேடப்புடுசருகண்டாதி
போயினவதலா ஏமிலேதுபுட்டியே கள்ளுபுட்டியே

பட்டைதண்ணியைநம்பிநம்பி
சொட்டுமூத்நங்கூடகாணோம் புட்டியே கள்ளுபுட்டி

கள்ளுவொச்சினமாடவினி
காலிவாளுபயப்படுந்தி காவடி கள்ளுகாவடி

இத்தனைநாள்பட்டபாடு
யாரைகேட்டால்தெரியபோவுதுகுடுவையே கள்குடு

சிறுமணலூர்முனிசாமி
செப்பிசெப்பிநவ்விளுடுமொந்தையே கள்ளுமொந்தை

பரிபூரணானந்தபோதம் நேற்று
பகலெல்லாமழைபெய்து சுவரெல்லாம்வோதம்

சாருயப்புட்டியைநம்பு—அதை
சாப்பிட்டால்கொடுக்குதே அளவற்றதெம்பு
கையிக்கிசெலவில்லை கொம்பு—யாரை
கண்டதேகுத்தினால் கயனுதேகெம்பு (தரு)

பெற்றதாய் சொல்லைக்கேளாதே—உந்தன்
பெண்டாட்டிபிள்ளைக்கி கஞ்சிவார்க்காதே
உற்றாரைஊரில் சேர்க்காதே—உந்தன்
ஆயுசுக்கும்ஒருகாசு தருமஞ்செய்யாதே (தரு)

பெற்றதாயாரைதடிகொண்டுமோட்டு—பெற்ற
தகப்பனையும்பாட்டனையும் வீட்டைவிட்டோட்டு
உற்றாரைஉறவாரைமாட்டு-இந்த
ஊரிலுள்ளோர்மேல் கச்சையுங்கட்டு

தருமஞ்செய்யாதிருமனமே-நாளை
கருமத்தைசெய்தாலே கடைத்தேறலாமே தரு

கள்ளுகடைசிந்து,

முற்றிற்று.